# 18 திருவிவிலியம்



படம் 18.1 திருவிவிலியம்

திருவிவிலியம் கிறிஸ்தவர்களாகிய எமது புனித நூலாகும். ஆரம்பகாலத்தில் இது ஒரே புத்தகமாக அமைந்திருக்கவில்லை. ஆனால் இன்று திருவிவிலியம் ஒரே புத்தகமாக எமக்குக் கிடைத்திருக்கின்றது. இறை செய்தியானது வாய்மொழியாகக் காக்கப்பட்டு 1200 வருடத்திற்குள் புத்தகமாக வடிவம் பெற்றது.

திருவிவிலியம் பல எழுத்தாளர்களைக் கொண்டு எழுதப்பட்ட பலவிதமான புனித நூல்களைக் கொண்ட ஒரு நூலாகும். இது மனித எழுத்தாளர்களால் எழுதப்பட்டிருப்பினும், அனைத்தும் இறை ஏவுதலால் எழுதப்பட்டவை என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். திருவிவிலிய நூல்கள் ஆரம்பத்தில் பப்பிரஸ் என்னும் நாணல் தண்டுகளினால் அமைக்கப்பட்டு எழுதப்பட்டது. இதையே சுருள் ஏடு என அழைத்தனர். ஆரம்பத்தில் கல் வெட்டுக்களிலும் விலங்குகளின் தோலிலும் இறை வார்த்தை எழுதப்பட்டது. இவற்றை பாதுகாப்பதற்குப் பலவிதமான முறைகள் பயன்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில் எபிரேய மொழியில் எழுதப்பட்ட திருவிவிலியம் பின்னர் கிரேக்க மொழிக்கும் வேறு பல மொழிகளுக்கும் மொழிபெயர்க்கப்பட்டது.

**'பைபிள்'** என்ற சொல் 'பிப்ளோஸ்' என்னும் கிரேக்க சொல்லில் இருந்து பிரிந்து வந்த சொல் ஆகும். இதன் பொருள் **'புத்தகம்'** என்பதாகும் இவ்வாறு பல நூல்களைக் கொண்டு தொகுக்கப்பட்ட திருவிவிலியத்தை நாம் ஒரு நூல் நிலையம் என்றும் ஏற்றுக்கொள்வோம்.


படம் 18.2 சுருள்

ஆசிரியர்கள் பலரைக் கொண்டு எழுதப்பட்ட இந்த உன்னத நூலில் வரலாற்றுக் கதைகள், நீதிச் சட்டங்கள் அரச நிர்வாகம், இறைவாக்கினரின் வெளிப்பாடு, விசுவாசம், இலக்கியம், இறை எச்சரிக்கையின் போதனைகள் ஆகியன அடங்கியுள்ளன.

திருவிவிலியத்தில் இரு பெரும் பிரிவுகள் உண்டு. அவை பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் ஆகும். கடவுளின் மூலமாக உலகம் படைக்கப்பட்ட செய்தியில் இருந்து ஆரம்பமாகி, பலவிடயங்களை உள்ளடக்கி, பழைய ஏற்பாடு விபரமாக எழுதப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் பிறப்பு, கிறிஸ்துவின் பணி ஆதித் திருச்சபை வரலாறு போன்ற விடயங்கள் விபரமாக எழுதப்பட்டுள்ளது. எனவே, இறைவார்த்தையை எமக்கு வெளிப்படுத்துவது திருவிவிலியமாகும். இது எமக்கு மிகவும் சிறந்த, புனிதமான நூலாக மதிக்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் எபிரேய மொழியில் எழுதப்பட்டிருந்த பழையஏற்பாடு, கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. இயேசுவின் காலத்திற்குப் பின் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. அதற்குக்காரணம் உரோமப் பேரரசின் ஆட்சியின் கீழ் இருந்த பலஸ்தீனாவின் ஆட்சி மொழியாக கிரேக்க மொழி இருந்து வந்தது. அச்சு இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்ட பின் ஒரே புத்தகமாக திருவிவிலியம் எமது கைகளில் கிடைத்தது. உலகில் பல மொழிகள் பேசும் மக்களுக்கு அவர்களின் சுயமொழியில் திருவிவிலியத்தை வாசிப்பதற்கு எண்ணற்ற மொழிபெயர்ப்புக்கள் வெளிவந்தன. இன்று உலகிலேயே மிகவும் கூடுதலான மொழிபெயர்ப்புக்களில் வெளிவந்த ஒரே புத்தகம் திருவிவிலியமாகும். இதன் முக்கிய இருபகுதிகளான பழைய ஏற்பாட்டில் முப்பத்தொன்பது புத்தகங்களும் புதிய ஏற்பாட்டில் இருபத்தேழு புத்தகங்களும் அடங்கியுள்ளது.

திருவிவிலியத்தின் முதல் ஐந்து புத்தகங்களும் பஞ்சாகமங்கள் என அழைக்கப்படும். அதில் இஸ்ரயேலரின் வரலாறும் நிதிச் சட்டங்களும் அடங்கியுள்ளன. இரண்டாம் நூலான விடுதலைப்பயணம் எனப்படுவது எகிப்தில் குடியேறி அடிமைகளாகிய இஸ்ரயேல் மக்களை விடுதலை

செய்து அழைத்து சென்ற பயணம் விபரிக்கப்பட்டுள்ளது. இறைவாக்கு நூல்களில் இறைவன் பல சந்தர்ப்பங்களில் இறைவாக்கினரை அழைத்து மக்களுக்கு கொடுத்த இறைசெய்திகள் அடங்கியுள்ளன. வரலாற்றின் விபரங்கள் இலக்கிய நூல்களாக இருப்பதோடு தானியேலின் நூல் தரிசன நூலாக குறிப்பிடப்பட்டுள்ளது.




படம் 18.3
திருவிவிலியம்

திருவிவிலியத்தில் புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களும் நற்செய்திகளாக அறிமுகப்படுத்தப்படுகிறது. இயேசுவின் வாழ்வை பற்றிய கருத்துக்கள், மக்களுக்கு ஆற்றிய பணிகள், அவரின் பாடுகள், மரணம், உயிர்ப்பு அனைத்தும் உண்மையாக கிறிஸ்துவை பின்பற்றுபவர்கள் அறிந்திருக்கவேண்டிய பெறுமதியான கருத்துக்கள் ஆகும். அதைத் தொடர்ந்து வரும் திருத்தூதர் பணி நூலானது ஆதித்திருச்சபையின் வரலாறுகளைக் கூறுகின்றது. அடுத்து பல திருமுகங்களும் திருச்ச பைகளுக்கான போதனைகளாக அடங்கியுள்ளன. இவற்றில் அதிகமானவை பவுலினால் எழுதப்பட்டவைகள் ஆகும். இத்திருமுகங்கள் அன்று முதல் இன்று வரை எமது திருச்சபைக்கும் கிறிஸ்தவர்களுக்கும் சிறந்த போதனையையும் வழிக்காட்டுதலையும் பெற்றுத் தருகின்றது.

பழைய ஏற்பாடு எமக்கு முக்கியமானதாகும். அது இயேசு வின் பின்னணிக்கு ஏற்றதான இறைவார்த்தையும் அவரைப் பற்றிய இறைவாக்குகளையும் அடக்கி இருக்கின்றது. இயேசு பயன்படுத்தியதும் பழைய ஏற்பாட்டின் நூல்களாகும் அவர் தமது முதலாவது போதனைக்காக தெரிவு செய்ததும் எசாயா இறைவாக்கினரின் நூலாகும். அவ்வாறே நியாயப்பிரமாணங்களையும் நன்றாகக் கற்றறிந்து அவற்றை நிறைவேற்றவே வந்தேன் என்றார். மேலும் இயேசு தனக்கு ஏற்பட்ட சோதனைகளிலிருந்து வெற்றி பெறுவதற்கும் பழைய ஏற்பாட்டிலுள்ள இறைவார்த்தைகளையே பயன்படுத்தினார்.

இவற்றைப் பார்க்கும் போது, அவரைப் பின்பற்றுவோருக்கும் திருவிவிலியமானது புனித நூலாகும். அதில் எழுதப்பட்டவை இறை வார்த்தைகளாகும். எனவே சிறுவயது முதல் நாம் அதை வாசிப்பதற்கு பழகிக் கொள்ள வேண்டும். எமது வாழ்வில் நல்லவைகளை அறிந்து கொள்வதற்குச் சரியான வழிக்காட்டுதல் திருவிவிலியத்தில் கிடைக்கின்றது. நாம் இறைவனின் பிள்ளைகள் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்கு இறைவார்த்தைகள் மூலம் கிடைக்கும் தைரியமும், பெலனும் அளவிடப்பட முடியாதவையாகும்.

# திருவிவிலியம்

## பழைய ஏற்பாடு (39 புத்தகங்கள்)

### திருச்சட்டங்கள்
**பவுலடிகளின் திருமுகம்**

1. தொடக்கநூல்
2. விடுதலைப்பயணம்
3. லேவியர்
4 எண்ணிக்கை
5. இணைச்சட்டம்

### முக்கால இறைவாக்கு

1. யோசுவா
2. நீதித்தலைவர்கள்
3. i சாமுவேல்
4.ii சாமுவேல்
5.i அரசர்கள்
6.ii அரசர்கள்

### பிற்கால இறைவாக்கு

**பெரியது**

1. ஏசாயா
2. எரேமியா
3. எசேக்கியேல்

**சிறியது**

1. ஓசேயா
2. யோவேல்
3. ஆமோஸ்
4. ஒபதியா
5. யோனா
6. மீக்கா
7. நாகூம்
8. ஆபகூக்
9. செப்பானியா
10. ஆகாய்
11. செக்ரியா
12. மலாக்கி

### எழுத்தேடுகள்

**இலக்கியம்**

1. ரூத்
2. எஸ்தர்
3. யோபு
4. திருப்பாடல்கள்
5. நீதிமொழிகள்
6. சபை உரையாடல்
7. இனிமை மிகு பாடல்
8. புலம்பல்

**வரலாறு**

1. குறிப்பேடு
2. குறிப்பேடு
3. எஸ்ரா
4. நெகேமியா

**மறைபொருள் இலக்கியம்**

தானியேல்

## புதிய ஏற்பாடு (27புத்தகங்கள்)

### நற்செய்திகள்

1. மத்தேயு
2. மாற்கு
3. லூக்கா
4. யோவான்

### வரலாறு

திருதூதர்பணிகள்

### திருமுகங்கள்

1. ரோமர்
2. கொரிந்தியர்
3.2 கொரிந்தியர்
4. கலாத்தியர்
5. எபேசியர்
6. பிலிப்பியர்
7. கொலோனசயர்
8.1 தெசலேனிக்கேயர்
9.2 தொசலேனிக்கேயர்
10.1 திமோத்தேயு
11.2 திமொத்தேயு
12. தீத்து
13. பிலமோன்

### பொதுத்திருமுகம்

1. எபிரேயர்
2. யாக்கோபு
3.1 பேதுரு
4.2 பேதுரு
5.1 யோவான்
6.2 யோவான்
7.3 யோவான்
8. யூதா

யோவானுக்கு வெளிப்படுத்திய திருவெளிப்பாடு

**மனனவசனம்**

**திருப்பாடல் *119:89***

**ஆண்டவரே என்றென்றைக்கும் உள்ளது உமது வாக்கு விண்ணுலகைப்போல் அது நிலைத்துள்ளது.**

செயற்பாடு

1. பஞ்சாகமத்தில் அடங்கும் ஐந்து நூல்களையும் புதிய ஏற்பாட்டின் நான்கு நற்செய்தி நூல்களையும் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுக.

2. திருவிவிலிய நூல்களின் அட்டவணையை வகுப்பறையில் காட்சிப்படுத்துவதற்கு முன் வையுங்கள். குழுக்களாகப் பிரித்து பல பகுதிகளை எழுதி வர்ணம் பூசச் செய்யுங்கள்.